©

தமிழ்நாடு அரசு
2024

கையெழுத்துத் தொடர்

**நிதி (படிகள்)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.351, நாள்: 19-11-2024.**

*(கார்த்திகை- 04, திருவள்ளுவர் ஆண்டு 2055)*

**<u>சுருக்கம்</u>**

**படிகள்** - 01-07-2024 முதல் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:-**

அரசாணை (நிலை) எண்.204, நிதி (படிகள்)த் துறை, நாள். 11-06-2024.

-oOo-

**<u>ஆணை:</u>**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் கீழ்க்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

| **2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/தர ஊதியம்** | |
|---|---|
| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** [மாதம் ஒன்றுக்கு] |
| [1] | [2] |
| 01-01-2024 | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 239 சதவீதம் |

2. 2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

| **2016-ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம்/தர ஊதியம்** | |
|---|---|
| **எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம்** [மாதம் ஒன்றுக்கு] |
| [1] | [2] |
| 01-07-2024 | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 246 சதவீதம் |

3. ஜூலை 2024 முதல் அக்டோபர் 2024 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படவேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

த.பி.பா.

4. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5. இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும்பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயச்சந்திரன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
அனைத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் / செயலாளர், சென்னை–9
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–22.
தலைமை தணிக்கை இயக்குநர் (மு.கூ.பொ), பேராசியர் க.அன்பழகன் மாளிகை, சென்னை–35.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள அனைத்து பிரிவுகள்.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–35.
அனைத்து சம்பளக் கணக்குகள் அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள் /அனைத்து சார் கருவூல அலுவலர்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
ஆணையாளர், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சென்னை–108.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து அரசுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர் / தூத்துக்குடி / வேலூர் / தஞ்சாவூர் / கும்பகோணம் / திண்டுக்கல் / நாகர்கோயில் / ஓசூர் / ஆவடி / காஞ்சிபுரம் / கரூர் / கடலூர் / சிவகாசி / தாம்பரம் மாநகராட்சி.
ஊரக வளர்ச்சித் துறை, அனைத்து உதவி இயக்குநர்கள் / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள் / அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இயக்குநர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், தரமணி,
சென்னை–113.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>நகல் பெறுநர்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் – ( I, II & III ) சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர் , சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
அரசு முதன்மை செயலாளரின் முதுநிலை முதன்மை தனி செயலர், நிதித்துறை, சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம் , புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப் பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத் துறை), அறை எண்.261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்

–/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /–

ஜெ. நித்யா 19/11/2024
பிரிவு அலுவலர்
19/11/24